**C.C.No. 264/25** **12.05.2026**

PW2 சரவணன், த/பெ.மாரியப்பன்

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**
Pre - charge Evidence

நான் இம்மனுவின் மனுதாரர் மகாலெட்சுமியின் கணவர். என் மனைவியின் தகப்பானர் 23.12.2007 அன்று இறந்தார். அவர் இறந்த பிறகு என் மைத்துனர்கள், கோபி, சரவணன், வெங்கடேஷ், பிரபு ஆகியோர்கள் சேர்ந்து மேற்படி கோபி மனைவி ராமலெட்சுமி பெயரில் பத்திரம் பதிந்துள்ளார்கள். 1999ம் வருடம் என் மனைவி உரிமை வயது அடைந்துவிட்டார். ஆனால், என் மனைவியை மைனர் என்று சொல்லி என்னுடைய இறந்துபோன மாமனார் மற்றும் மேற்படி மூன்று மைத்துனர்களும் சேர்ந்து கூட்டுறவு சொசைட்டியில் லோன் வாங்கியுள்ளார்கள். மேற்படி கடனை முடித்து செல்லு ரசீது போடும்போதும் அந்த சொத்தை விற்கும்போதும் என் மனைவியிடம் கையொப்பம் வாங்கவில்லை. 2008ம் வருடம் என் மாமனார் இறந்த பிறகு வெற்றுத்தாளில் என் மைத்துனர்கள் மூன்று பேரும் சேர்ந்து என் மனைவியிடம் கையொப்பம் வாங்கி ஆள் மாறாட்டம் செய்து இரண்டு பத்திரம் பதிந்துள்ளார்கள். என் மனைவியின் காசோலையில் அவர்களாகவே கையொப்பம் போட்டு பணத்தை எடுத்துள்ளார்கள். கேட்டதற்கு என் மைத்துனர்கள் மூன்றுபேரும் வந்து எங்களை மிரட்டினார்கள். கோபி என் மனைவியின் கண்ணத்தில் அடித்துவிட்டார். தவறாக பேசினார்கள். 09.12.2022ம் தேதி காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தோம். சரியாக விசாரிக்கவில்லை.ஆகையால் நீதிமன்றத்திற்கு வந்துள்ளோம்.

**எதிரி ஆஜர்**
**1, 2, 4 எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை**

இவ்வழக்கின் மனுதாரர் எனது மனைவி என்றால் சரிதான். இவ்வழக்கு சம்மந்தமாக காவல் நிலையம் மற்றும் அனைத்து அலுவலகங்களுக்கும் எனது மனைவியை நான்தான் அழைத்து சென்று வருகிறேன் என்றால் சரிதான். இவ்வழக்கு எந்த காரணத்திற்காக புகார்தாரர் கொடுத்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் புகார்தாரரை இளவராக காண்பித்து கடன் பெற்று அந்த கடனை அடைத்ததாகவும், அந்த சொத்தை விற்பனை செய்ததாகவும் சொல்லியுள்ளேன், அந்த சம்பவம் எனது மாமனார் இறப்பதற்கு முன்னதாக நடந்த சம்பவம் என்றால் சரிதான். அந்த சொத்து எனது மாமனார் காலத்தில் கிரையம் செய்யப்பட்டு, அவர் காலத்திலேயே விற்பனை செய்யப்பட்ட சொத்து என்றால் சரிதான். மனுதாரர் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள 5 முதல் 14 வரையான சொத்துக்கள் மனுதாரரின் தாயாரும், எனது மாமியாருமான கணகாம்பாள் பெயர் உள்ளது என்றால் கணகாம்பாள் பெயரும், எனது மாமனார் பி.எம்,ஆறுமுகம் பெயரும் உள்ளது. மேற்படி ஆவணங்கள் கணகாம்பாள் மற்றும் ஆறுமுகம் விற்பனை செய்ததை காட்டக்கூடிய ஆவணங்கள் என்றால் 5ம் ஆவணம் விடுதலை பத்திரம், 6ம் ஆவணம் விடுதலை பத்திரம், 7ம் ஆவணம் அடமானபத்திரம், 8ம் ஆவணம் கிரைய ஆவணம், 9ம் ஆவணம் கிரைய ஆவணம், 10ம் ஆவணம் கிரைய ஆவணம், 11ம் ஆவணம் தான செட்டில்மென்ட், 12ம் ஆவணம் தான செட்டில்மென்ட், 13ம் ஆவணம் தான செட்டில்மென்ட், 14ம் ஆவணம் தான செட்டில்மென்ட். மேற்கூறிய ஆவணங்கள் அனைத்திலும் கணகாம்பாள் தரப்பினர்கள் எழுதிக்கொடுத்த ஆவணம் அவர்களை இந்த வழக்கில் எதிரிகளாக மனுதாரர் சேர்க்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் இதற்கு முன்னர்

கணகாம்பாளை எங்கள் தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான். கணகாம்பாளை தரப்பினராக சேர்ந்திருந்தால் அல்லது சாட்சியாக சேர்த்திருந்தால் ஆறுமுகம் மற்றும் கணகாம்பாளின் சுயசம்பாத்திய சொத்து என்று தெரியவரும் என்பதனால் அவர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாவோ, சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

2) நான் எனது மனைவியான மனுதாரரை அழைத்துகொண்டு இவ்வழக்கை நில அபகரிப்பு பிரிவில்தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நில அபகரிப்பு பிரிவில் மூன்று முறை மனுதாரரையும், எதிர்மனுதாரரையும் விசாரித்தார்கள் என்றால் சரிதான். அந்த விசாரணை முடிவில் மனுதாரர் இவ்வழக்கு சம்மந்தமாக நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்வதாக எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. நாங்கள் எதிரிகள் மீது நில அபகரிப்பு தவிர வேறு எங்காவது புகார் கொடுத்துள்ளோமா என்றால் இல்லை. நில அபகரிப்பு விசாரணையின் முடிவில் இவ்வழக்கு உரிமையியல் வழக்கு என்பதனால் அவர்களின் அறிவுரையின் பேரில் நீதிமன்றத்தில் பரிகாரம் பெற்றுக்கொள்வதாக எழுதிக்கொடுத்துவிட்டு தற்போது அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் மனுதாரர் சொல்வதுபோல் சொத்து தொடர்பாக குற்றம் நடந்ததாக ஆதரவாக ஆவணம் எதுவும் மனுதாரர்தரப்பில் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளோம்.

3) காசோலையில் எதிரிகள் அவர்களாக கையொப்பம் செய்து பணம் எடுத்துக்கொண்டதாக சொல்லியுள்ளேன், அதற்கு ஆதரவாக அந்த காசோலையோ, அந்த காசோலையின் எண்னை மனுதாரர் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. புகார்தாரர் நில அபகரிப்பு பிரிவில்

கொடுத்த புகாரில் மனுதாரரை அடித்ததாகவோ, மிரட்டியதாகவோ எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள அனைத்து குற்றங்களும் 2015ம் ஆண்டிற்கு நடைபெற்ற குற்றம் என்றால் சரிதான். எதிரிகள் 2019ம் ஆண்டு சில சொத்துக்களை மனுதாரான எனது மனைவி பெயரில் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான், இவ்வழக்கின் 3ம் சாட்சி செல்வராஜ் எனது உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். அவர் என்னுடன் தான் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல, தனியாகத்தான் வசித்து வருகிறார். அவர் எந்த முகவரியில் வசித்து வருகிறார் என்றால் பெத்தானியாபுரத்தில் வசித்து வருகிறார். இவ்வழக்கை விரைந்து முடிக்ககோரி மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் மனுதாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த மனுவில் மனுதாரர் ஒத்தக்கடை காவல் நிலையத்தில் புகார் கொடுத்து, அந்த புகாருக்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சொல்லியுள்ளார் என்றால் இல்லை.

4) நில அபகரிப்பு பிரிவில் மனுதாரர் கொடுத்த புகாருக்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்று அவர்களது மேல் அதிகாரிக்கு மனுதாரர் புகார் கொடுத்தாரா என்றால் இல்லை. இந்த வழக்கான 2023ம் வருடம் மனுதாரர் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மனுதாரரின் கால தாமதத்தில்தான் 2025 CC வழக்காக பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனது மைத்துனர்கள் வசதியாக இருப்பதனால் அவர்களிடமிருந்து பணம் அபகரிக்க வேண்டும் என்று எனது மனைவியை தூண்டிவிட்டு அவர்கள் மீது குற்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல, அவர்கள் குற்றம்புரிந்ததால்தான் மனுதாரர் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் எந்த ஒரு குற்றம் நடந்ததற்கான

முகாந்திரம் இல்லை, நாங்கள் சட்ட விரோதமான பலன்களை அடைவதற்கு எனது மனைவிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**3ம் எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் எம்.பி.ஏ பட்டப்படிப்பு படித்துள்ளேன். நான் என்ன வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் நெல் வியாபாரம் செய்து வருகிறேன். எந்த வருடத்திலிந்து நெல் வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் 1998ம் வருடத்திலிருந்து. இவ்வழக்கில் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் யார் பெயரில் சான்றிட்ட நகல் பெற மனு கொடுக்கப்பட்டது என்றால் எனது பெயரிலும், எனது மனைவியான மனுதாரர் பெயரில் கொடுக்கப்பட்டுள்ளது. புகார் மனுவில் கொடுத்துள்ள முகவரியில் தான் தற்போது நானும், மனுதாரரும் வசித்து வருகிறோம் என்றால் இல்லை. எந்த தேதியில் வேறு முகவரிக்கு மாற்றம் செய்தோம் என்றால் 2023ம் வருடம், தேதி ஞாபகத்தில் இல்லை. எனக்கும், இவ்வழக்கின் எதிரிகளான எனது மைத்துனர்களுக்கும் இடையே உறவு முறை எப்படி இருந்தது என்றால் எங்கள் வீட்டு விழாக்களுக்கு அவர்கள் வருவார்கள், அவர்கள் வீட்டு விழாக்களுக்கு நாங்கள் செல்வோம்.

2) நான் தற்போது குடியிருந்து வரும் முகவரியை சொல்ல முடியுமா என்றால் H 903, எல்லீஸ் நகர், மதுரை 625011. இதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2015ற்கு முன்னர் நடந்ததாக சொல்லப்படும் குற்றத்திற்கு பின்னிட்டு எதிரிகளிடமிருந்து சொத்துக்களை பெற்றுக்கொண்டு அது போதவில்லை என்று மனுதாரரை தூண்டிவிட்டு எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல்

செய்து, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, எனது மாமனார் 2007ம் வருடம் இறந்த பின்னர் 2013ம் வருடம் எதிரிகள் ஆள் மாறாட்டம் செய்து சொத்துக்களை பதிவு செய்துள்ளார்கள்.